செய்தி வெளியீடு எண்:553

<u>செய்தி வெளியீடு – 27.08.2009</u>

## தென்னை–பனைத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஆய்வு செய்யும் உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் திரு கே.பி. சிவசுப்ரமணியம் அவர்களின் தலைமையிலான குழுவின் அறிவிப்பு!

தமிழகத்தில் உள்ள தென்னை–பனைத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை விரிவாக ஆய்வு செய்து, சட்டப்படி ஆவன செய்வதற்கு தமிழக அரசால் நியமிக்கப்பட்டுள்ள நீதியரசர் திரு கே.பி.சிவசுப்ரமணியம் அவர்களின் தலைமையிலான குழு, வரப்பெற்றுள்ள மனுக்களின் பரிசீலினைக்குப்பின் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள தென்னை–பனைத் தொழிலாளர்களின் கருத்துக்களை நேரடியாக கேட்டறிய மாநிலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளது.

மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் முறையே 01.09.2009 மற்றும் 02.09.2009 ஆகிய நாட்களில் குழு வருகை தந்து கூட்டங்களை நடத்தும். இக்கூட்டங்களில் தென்னை–பனைத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை வெளிப்படுத்த விரும்புவோர் கலந்துக் கொள்ளலாம். மதுரையில் நடைபெறும் கூட்டத்தில் திண்டுக்கல், சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள தென்னை–பனைத் தொழிலாளர்களின் கோரிக்கைகளையும் திருநெல்வேலியில் நடைபெறும் கூட்டத்தில் கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர் மாவட்டங்களிலுள்ள தென்னை–பனைத் தொழிலாளர்களின் கோரிக்கைகளையும் குழு கேட்டு, ஆராயும். மற்ற மாவட்டங்களுக்கான பயண விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9